செ.வெ.எண் : 19 நாள் : 14.03.2021

**கோயம்புத்தூர் மாவட்ட சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.**

*********************************************

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் பணியாற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று (14.03.2021) 111-மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 116-சூலூர் சட்டமன்ற தொகுதிக்கு ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரியிலும், 117-கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியிலும், 118-கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியிலும், 119-தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு ஸ்ரீ கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியிலும், 120கோவை தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு நிர்மலா பெண்கள் கல்லூரியிலும், 121சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு பி.எஸ்.ஜி தொழில்நுட்ப கல்லூரியிலும், 122-கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்கு ஹிந்துஸ்தான் தொழில்நுட்ப கல்லூரியிலும், 123-பொள்ளாச்சி, 124-வால்பாறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரியிலும் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆப., அவர்கள் **தேர்தல் பயிற்சி வகுப்பு நடைபெறும்** ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, ஸ்ரீ கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, ஹிந்துஸ்தான் தொழில்நுட்ப கல்லூரி ஆகிய மையங்களில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திருமதி.அம்சவேணி, (கிணத்துக்கடவு), திரு.செந்தில் அரசன் (தொண்டாமுத்தூர்), திரு.முருகேசன் (கோவை வடக்கு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் -2021 முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி பல்வேறு கட்டப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களை இணையதளம் வாயிலாக 10சட்டமன்ற தொகுதிகளுக்கும் பிரித்து அனுப்பும் வகையில் இணையதள குலுக்கல் (Randomization) நடத்தப்பட்டு, 5331-முதன்மை தேர்தல் அலுவலர்கள், 5328-முதல் நிலை வாக்குப்பதிவு அலுவலர், 5489-இரண்டாம் நிலை வாக்குப்பதிவு அலுவலர்கள், 5386-மூன்றாம் நிலை தேர்தல் அலுவலர்கள் என மொத்தம் 21534 அலுவலர்களுக்கு பணி உத்தரவுகள் வழங்கப்பட்டது.

அதன்படி, வழங்கப்பட்ட பணி உத்தரவுகளின் அடிப்படையில் பணி ஆணை பெற்ற அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்பு காலை மற்றும் மாலை என இருவேளைகளில் நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் வாக்குப்பதிவிற்கு முந்தைய நடைமுறை, வாக்குப்பதிவின்போது பின்பற்ற வேண்டிய விதிகள், வாக்குப்பதிவு தலைமை அலுவலர் பூர்த்தி செய்யவேண்டிய படிவங்கள், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்பாடு உள்ளிட்டவை குறித்து தேர்தல் பணியாற்றும் அலுவலர்களுக்கு மண்டல அலுவலர்கள் விரிவாக எடுத்துரைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார். தொடர்ந்து வாக்குப்பதிவு அலுவலர்கள் தபால் வாக்குகள் செலுத்த ஏதுவாக அதற்கான படிவமும் பயிற்சியின்போதே வழங்கப்பட்டது. முதற்கட்ட பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்கள், தவறாது அடுத்து பயிற்சியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுத்திட அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**